# புத்தள பிரதேச சபை

## மொனறாகலை மாவட்டம்

-----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 16 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, புத்தள பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதி திகதியில் உள்ளவாறு மீளளிப்பு செய்யப்பட்ட வேண்டிய சம்பளங்கள் மற்றும் மந்திரமார் படி ரூபா 2,045,908 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

-------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது மோட்டார் கிரேடர் இயந்திரம், பாதை தகர்க்கும் இயந்திரம், பெக்கோ லோடர் மற்றும் டிபர் வண்டி என்பவற்றை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 6,900,173 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1988 முதல் 2012 ஆண்டு வரை முன் கொண்டுவரப்படும் 07 ஆதனங்கள் தொடர்பான வாடகை ரூபா 1,830,391 தொகையினை மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) புதிய கடைகளை நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்டிருந்த கடை வாடகையாளர்களிடம் அறவிப்பட வேண்டியிருந்த ரூபா 162,683 இற்கான கடை வாடகையினையினை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------

பல வருட காலமாக முன் கொண்டு வரப்படும் ரூபா 309,340 இற்கான நிலுவை உள்ளுராட்சி ஓய்வூதிய பங்களிப்புத் தொகையினை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

தேவையினை தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 386,853,792 இற்கான 03 சொத்து விடயங்கள், ரூபா 9,264,772 இற்கான 02 பொறுப்பு விடயங்கள், ரூபா 59,596 இற்கான 05 செலவு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,094,873 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,363,126 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய குறைவடைதல் ரூபா 9,268,253 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

--------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 36,896,584 இற்கான நிலுவை வருமானத்தினை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 வீதவரி

-----------

(அ) 2007 ஆண்டின் பின்னர் வீதவரிக்காக ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 10,000 இனை மிகைத்த நிலுவை வீதவரி மீதிகள் காணப்படும் 48 வரி செலுத்துவோரிடம் ரூபா 568,475 இற்கான வீதவரியினை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 வாடகை

-------------

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு சொந்தமான கடை வாடகையினை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கடைகள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக 17 கடைகளின் கடை வாடகையாக ரூபா 677,700 உம் மற்றும் தாமதக் கட்டணமாக கூட்டுத்தொகை ரூபா 855,502 அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு அல்லது கடைகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்

--------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நிலுவைத் தொகை ரூபா 1,936,946 ஆகும்.

2.3 மிகை விதிப்புக்கள்

-------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 172(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 733,241 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

---------------------------------------------

(அ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த ரூபா 25,563,565 இற்கான கடன் தொகை தொடர்பாக 2013 செப்டம்பர் 30 திகதி முதல் 2014 அக்டோபர் 31 திகதி வரை செலுத்தப்பட வேண்டிய 13 தவணைப் பணங்கள் உரிய முறைப்படி செலுத்தப்படாமையால் செலுத்தப்பட வேண்டியிருந்த

ரூபா 1,982,074 இற்கான வட்டித் தொகைக்கு மேலதிகமாக ரூபா 122,859 இற்கான மிகை விதிப்பு வட்டி ஒன்றும் செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது.

(ஆ) சபையில் கடமையாற்றும் 52 ஊழியர்கள் தொடர்பாக 2014 ஜனவரி 01 திகதி முதல் 2014 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதி தொடர்பாக அறவிடப்பட்டிருந்த ரூபா 1,237,469 தொகையினை அரசாங்க சேவை சேமலாப நிதியத்தினை ஊழியர் நிதியத்திற்கு செலுத்தப்படாமல் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மின்சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகள் செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும் எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 271,318 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது பொருத்தும் முறை, பொருத்த வேண்டிய விளக்குளின் வகை, எண்ணிக்கை பற்றிய விபரம் என்பன பதிவு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது காவலாளிகள், சாரதிகள், வெளிக்கள தொழிலாளர்கள், நூலக தொழிலாளர்கள் ஆகிய பதவிகளில் அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையின் கீழ் 1987 முதல் 2014 வரையான காலப்பகுதியில் கடமையாற்றிய 26 ஊழியர்களுக்கு நிரந்தர சேவையில் நியமனம் செய்திருந்தது போது அவர்கள் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்கியிருக்கவில்லை.

(உ) நிரந்தர மற்றும் அமைய அடிப்படையில் ஆட் சேர்க்கப்பட்டிருந்த சுகாதார, பாதைகள் மற்றும் வெளிக்கள தொழிலாளர்கள் 05 பேர்களை குறிப்பிட்ட வேலைக்காக ஈடுபடுத்தப்படாமல் அலுவலக முகாமைத்துவ சேவையில் வெற்றிடங்கள் காணப்படாத போதும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் கடமைகள் சாட்டப்பட்டிருந்தன.

(ஊ) அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியின் பிரகாரம் இரண்டு அலுவலக உதவியாளர்கள் சேர்ப்பதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த போதும், அங்கீகாரம் இன்றி நிரந்தர மற்றும் அமைய சுகாதார பாதைகள் தொழிலாளர்கள் 05 பேர் அலுவலக உதவியாளரின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(எ) சேவைகளின் போது பயன்படுத்துவதற்காக திவிநெகும திணைக்களத்தில் இருந்து மீளாய்வாண்டு நவம்பர் 17 ஆந் திகதி வழங்கியிருந்த ரூபா 1,178,000 பெறுமதியான Laksteel வகையைச் சேர்ந்த 1064 கல்வனயிஸ் குழாய்களில் இருந்து அங்கீகாரம் இன்றி ரூபா 859,143 பெறுமதியான 776 கல்வனயிஸ் குழாய்கள் வெல்லவாள, கதிர்காமம் மற்றும் தனமல்வில பிரதேச சபைகளுக்கு வழங்கியிருந்ததுடன் அவற்றுற்கான பெறுவனவு கட்டளைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜூன் 05 திகதி வரையும் சபைக்குக் கிடைத்திருக்கவில்லை. சபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 318,857 பெறுமதியான 288 கல்வனயிஸ் குழாய்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 19(1)(i) ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூலமாக பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பிரதியீட்டு, சுகாதார தொழிலாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு சம்பளங்கள்,

படிகள் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொது நிதியம் என ரூபா 100,052 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

(அ) உட அராவ குடியிருப்பு 2 பாதையின் மீதி பகுதியை அபிவிருத்தி செய்தல்

------------------------------------------------------------------------------------------------------------------------

2014 ஆண்டிற்கான கதவுக்கு கதவு ஊருக்கு ஊர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கூறிய பாதையினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 929,870 தொகையொன்றிற்கான சங்கம் ஒனறுடன் 2014 ஜுன் 14 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 05 திகதி முற்பணமாக ரூபா 185,997 ஒப்பந்த சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததது. 2015 ஜுன் 04 திகதி வெளிக்கள பரிசோதனையின் போது பாதையின் இரு மருங்கிலும் ஓரங்கள் 9 அங்குல ஆழத்திற்கு கொங்கிரீட் பண்ணப்பட வேண்டும். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட இரண்டு இடங்களில் ஆழம் 9 அங்குலங்கள் மற்றும் 6½ அங்குலங்கள் என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மனம்பிட்டிய நீர் செயற்திட்டத்தை அமுல் நடத்துதல்

-----------------------------------------------------------------------------------

2014 தனித்திருக்கும் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கூறி நீர்த் திட்டத்தை அமுல் நடத்துவதற்காக ரூபா 971,905 தொகை ஒன்றிற்கு சங்கம் ஒன்றுடன் 2014 ஜுன் 10 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்த சங்கத்திற்கு ரூபா 836,738 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஜுன் 04 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குறிப்பிட்ட நிர்மாண வேலை தனியார் காணி ஒன்றில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காணியை உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நிர்மாணிக்கப்பட்டிருந்த கிணற்றை நெருங்க முடியாதவாறு காடுகள் வளர்ந்திருந்தன.
(iii) கொடுப்பனவு விலைப்பட்டியல் மூலம் கொடுப்பனவு மேற்கொண்டிருந்த பின்வரும் வேலை பகுதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- பம்பு பொருத்திய அறையின் கதவினை பொருத்துதல்
- யன்னல்களுக்கு சாயம் பூசுதல்

(iv) நீர்திட்டத்தை அமுல் நடத்துதல் இடையே நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) 143/2 உடஅராவ தொடில்லகெடிய பாதையில் கொங்கிரீட் அச்சுக்கல் பரப்புதல்

--------------------------------------------------------------------------------------------------------------------------

2014 ஆண்டின் மகநெகும கிராமிய பாதைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கூறிய பாதையில் கொங்கிரீட் அச்சுக் கற்கள் பரப்புவதற்காக ரூபா 500,000 இற்கான தொகைக்கு சங்கம் ஒன்றுடன் 2014 ஜுன் 10 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை தொகை ரூபா 500,000 இற்கான மொத்த தொகையும் ஒப்பந்த சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஜுன் 04 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கொடுப்பனவு விலைப்பட்டியலின் பிரகாரம் 96 மீற்றர் தூரத்திற்கு கொங்கிரீட் அச்சுக் கற்கள் பரப்புவதற்காக கொடுப்பனவு மேற்கொண்டிருந்த போதும் 86 மீற்றர் தூரத்திற்கே கொங்கிரீட் அச்சுக் கற்கள் பரப்பப்பட்டிருந்தது.

(ii) பாதையின் இரு மருங்கிலும் 4’’ அகலத்திலும் 9’’ ஆழத்திலும் கொங்கிரீட் போடுவதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அவ்வாறு செய்திருந்த 03 இடங்களில் கொங்கிரீட் படையின் ஆழம் 6’’, 7’’ மற்றும் 8’’ ஆக காணப்பட்டது.

(iii) பாதையில் சில இடங்களில் கொங்கிரீட் அச்சுக் கற்கள் கீழிறங்கியிருந்தன.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

(அ) ஊவா உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 நவம்பர் 08 திகதி இலக்கம் 12/ஸங்/05/கஸல/பதுன் கொண்ட கடிதத்தின் மூலம் குப்பை முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக 20 லீட்டர் கொண்ட 500 குப்பை பாத்திரங்கள் வீட்டு மட்டத்தில் விநியோகிப்பதற்காக 2013 நவம்பர் 08 திகதி வழங்கப்பட்டிருந்தது. அந்த பாத்திரங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை மஹகொடயாய திண்ம கழிவுப்பொருள் மத்திய நிலைய வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த பாத்திரங்களை இருப்பு பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் மீள்சுழற்சி செய்யக் கூடிய குப்பை சேகரிக்கும் நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக தடுத்து வைத்தல் பணம் உட்பட ரூபா 2,029,126 தொகையொன்று ஒப்பந்த சங்கத்திற்கு செலுத்தியிருந்தது. நிர்மாண வேலை 2014 பெப்ரவரி 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அதற்கான உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தவாறு நிர்மாண வேலை மேற்கொள்ளப்படும் காணியின் உரிமையினை சபைக்கு உரித்தாக்கிய பின்னரே குறிப்பிட்ட நிர்மாண வேலையினை மேற்கொள்ளப்பட வேண்டும் என உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்திருந்தார். அவ்வாறு உரிமையை பெற்றுக்கொள்ளாமலேயே குறிப்பிட்ட நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மீள்சுழற்சி செய்யக் கூடிய குப்பைகளை சேகரிக்கும் நிலையத்தை பௌதீக ரீதியாக பரிசோதனை மேற்கொண்ட போது இந்த மத்திய நிலைய் இதுவரை குப்பைகள் முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், நிலையத்திற்கு மின்சக்தி மற்றும் நீர் வழங்கள் பெற்றிருக்கவில்லை எனவும், நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசல கூடத்திற்கான குழி தோண்டப்பட்டிருக்கவில்லை எனவும் கட்டடத்தின் பின் பகுதியின் கதவு ஒழுங்காக மூடக்கூடிய நிலையில் காணப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்